**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** கைத்தறி நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவாக சில கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன. அவற்றைச் செயல்படும்படிச் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த எந்த கூட்டுறவுச் சங்கங்கள் என்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** விசைத் தறிகளைப் புகுத்தும்போது கைத் தறி நெசவாளர்களையே கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, அவற்றில் இதைப் புகுத்துவார்களா ? அந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமோ, கடனோ கொடுக்க திட்டமிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கூட்டுறவுத் துறையில் விசை தறிகளைப் புகுத்துவது பற்றிதான் அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, வண்ணம் மாறும் மெட்ராஸ் ப்ளீடிங் துணி ரகம் இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை என்பது உண்மையா ? ஆம் எனில் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் இந்தத் துணை வினாவுக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. என். சங்கரய்யா :** நாம் வேண்டாம் என்றால் மற்ற மாநிலங்களுக்கு இது போய்விடுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மைசூர் போன்ற மாநிலங்களை எல்லாம்விட நம் மாநிலத்தில் அதிகமாக கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட நமது நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களில் ஐந்தில் ஒரு பங்கு இங்கேதான் இருக்கிறார்கள். ஆகவே இந்தப் பவர்லூமினால் நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு பவர் லூம்கள் மூலம் உற்பத்தியாகிற துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த எந்த வகையில் நம்முடைய கைத்தறியாளர்கள் பாதுகாக்கப்படவேண்டுமோ அவற்றை எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. நான் குறிப்பிட்டபோது நமக்கு பவர் லூம் வேண்டாம் என்றால் மற்ற மாநிலங்களுக்குத் தரப்போகிறார்கள். அங்கே துணிகள் உற்பத்தியாகி இங்கே வரப்போகின்றன. ஆகவே தான் இங்கேயே பவர் லூம்—கைத்தறியாளர்கள் பாதிக்கப்படாமல்—கொண்டுவந்து ஏற்றுமதிக்குத் தகுதியுள்ள ரகங்களை ஏற்றுமதி செய்வது பற்றியும் யோசிக்கலாம்.

**எட்டயபுரத்திலுள்ள பாரதியாரின் வீடு**

*** 191 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

எட்டையபுரத்தில் அமரகவி சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி, தேசிய நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**THIRU K. VINAYAKAM :** Sir, whereas Poet Bharathi is considered to be the national board of the common people and who was responsible for the inspiration of the spirit of Independence in South India and whereas the houses where he lived—not only in Ettayapuram but also in Triplicaneare considered to be places of

national importance and almost patriotic temples, will the Government reconsider the desirability of not only purchasing those houses at Ettayapuram and Triplicane and keep them open for the people —if not this generation but at least the generation which is fast losing interest in this kind of field—to draw the inspiration of patriotic spirit ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மகாகவி பாரதியார் அவர்களுடைய நினைவு எழுகிற வகையில், அவரைப் பற்றி மக்கள் உள்ளத்தில் தங்குகிற வகையில் எட்டையபுரத்தில் ஒரு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டிருக்கிறது. அது நூல் நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் உலகத் தமிழ் மகாநாட்டை ஒட்டி பாரதியார் சிலை ஒன்று கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக எட்டையாபுரத்தில் உள்ள அவரது வாழ்ந்த இல்லத்தை வாங்கலாம் என்றால் மாவட்ட ஆட்சியாளர் அதனுடைய நியாயமான மதிப்பு 14 ஆயிரம் என்கிறார். ஆனால் வீட்டின் சொந்தக்காரர் இந்தச் சிறப்பான நிலையை மனதில் கொண்டு வீட்டிற்கு 35 ஆயிரம் கோருகிறார். ஆகவே அக்விசிஷன் ஆக்ட் பிரகாரம் அதைக் கைக்கொள்ளலாமா என்பது அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அந்த ஊரில் இருக்கிறவர்கள் பாரதியாரின் நினைவுச் சின்னமாகக் கருதி பாதுகாக்க அந்த வீட்டை இனமாகவே கூடக் கொடுக்கலாம். ஆனால் அதிக மதிப்பு கோருவதன் காரணமாக நிலைமை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** பாரதியாருடைய மனைவியார் ஊர் கடையம் ஆகும். அங்கேதான் அவர் நீண்ட நாள் வாழ்ந்தார்கள். காணி நிலம் வேண்டும் என்று அவர் பாடினாரே, அந்தக் காணிநிலம் கூட அங்கேதான் இருக்கிறது. அங்கு அவர் வாழ்ந்த வீட்டை மக்கள் பார்வைக்கு ஆக்குவதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாரதியாரைப் பற்றி எண்ணலாமே தவிர, உற்றார், உறவினர் யாவரையும் பற்றி எண்ணிக் கொண்டு போனால் முடிவு ஏற்படாது.

**DR. H. V. HANDE :** Sir, while we are confident that this Government have fully realised the necessity of reminding ourselves of the sayings and teachings of Subramania Bharathiar, I wish to know what are the concrete steps taken by this Government to perpetuate the excellent teachings and sayings of Bharathiar, just as the Government have taken positive steps with regard to the teachings and sayings of Thiruvalluvar ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாரதியாருடைய நூல்கள் தேசியமாக்கப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கமே அச்சிட்டு மலிவு விலையில் மக்களுக்கு விநியோகித்திருக்கிறது. பாரதியாருடைய நாளைக் கொண்டாடுவதன் மூலமாக மக்களிடத்தில் அவரது இலக்கியம் பரப்பப்பட்டு வருகிறது. தபால் தலை வழங்குவதன் மூலமாகவும் இந்த அரசாங்கம் பல வகையில் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது.

### தஞ்சை மாவட்டத்திலுள்ள வடிகால் வாய்க்கால்கள்

*192 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், இதுவரை எத்தனை வடிகால் வாய்க்கால்களில் நாணல் அகற்றும் வேலை நடந்துள்ளது ?

(இ) அதற்கான திட்டங்கள் எவ்வாறு தயாரித்து அமல்படுத்தப்படுகிறது ?